முருகப்பெருமான் துணை

# மகான் சக்தி நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

07.05.2021, வெள்ளிக்கிழமை

1. ஞான சூட்சும வடிவமாக
ஞானிகளின் சக்தியுமாக
ஞானமாக தரும பலமாக
ஞானயுகம் படைக்க வந்தநல் ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
இனிமைபட பிலவ தகர் திங்கள்
இருபான்வேத திகதி புகர் வாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 24ம் நாள், 07.05.2021 வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் யோகபிரசன்ன ஆசி
வழங்குவேன் சக்தி நாயனாரும்
சோரமிலா நல்லுலகம் அமைய
சுத்த சன்மார்க்க வழிகாட்டும் அரங்கனே
4. அரங்கன் ஞானவழி தன்னை
அகிலமே ஏற்றுத் தொடர
வரங்களாக பாதுகாப்பு கூடி
வந்த நச்சுக்கிருமி துன்பம் விலகும்
5. விலகுமே உயிர்பலி அல்லல்
வினைவழி தீய செயல்கள்
விலகியே பாதுகாப்பு காணும்
வேலவன் சக்தியான அரங்கன்
6. அரங்கன் தரும வழிகாட்டல்
அகிலத்தில் தரும பலம் கூட்டி
வரங்களாக நிரம்பி எங்கும்
வள்ளல் தன்மை மக்களிடை
7. மக்களிடை பெருகி வளரும்
மனபக்குவம் தயவுநிலையாகி
தேக்கமின்றி எங்கும் பூர்த்தி
தேவைகட்கு மேலாக ஓங்கும்
8. ஓங்கவே ஞானிகள் பூசை
ஓங்கார குடிலில் தடைபடாதபடி
ஓங்கியே தொடர்ந்து நடக்க
ஓங்கார சக்தி எங்கும் பரவி
9. பரவி பாதுகாப்பு பெருகும்
பண்பான மக்கள் படையால்
கிருமி வழி இடர் ஓடும்
குறையிலா சமூக பலம் காணும்

10. காணவே அரங்கன் காட்டும்
கந்த வேலன் வழிபாட்டை
ஞானமாக மக்கள் தொடர
ஞானபூமியாகி உலகம் சடுதி

11. சடுதி சகல பேரிடர்களையும்
சாதனையாக அகற்றி மீளும்
இடரின்றி வேலவன் சக்தி காக்கும்
இயம்பிய யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–